நோயாளி தகவல் கையேடு

# கண் ஹிஸ்டமின் எதிர்ப்பு மருந்துகள்

## (ANTIHISTAMINE EYE PREPARATIONS)

ஆண்டசோலின் (Antazoline) மற்றும்
டெட்ராஹைட்ரோசோலின் (Tetrahydrozoline) சொட்டு மருந்து
ஆண்டசோலின் மற்றும் நாஃபாசோலின் (Naphazoline) சொட்டு மருந்து
ஃபெனிராமைன் (Pheniramine) மற்றும நாஃபாசோலின் சொட்டு மருந்து

MINISTRY OF HEALTH
SINGAPORE

National Healthcare Group
Adding years of healthy life

NUH
National University Hospital
A member of the NUHS

Alexandra Health

EASTERN HEALTH ALLIANCE

JurongHealth

SingHealth

SINGHEALTH / PIL / T75R0

## உங்கள் மருந்து **பற்றிய** தகவல்

# ஆன்டிஹிஸ்டமின் (Antihistamine) எனப்படும் இம்மருந்துகள், குளிர், தூசி, காற்று, பனி, மகரந்தம், நீச்சல் அல்லது கண் ஒட்டுவில்லை (contact lenses) அணிவது போன்றவற்றால் ஏற்படக்கூடிய கண்எரிச்சல் மற்றும் கண் சிவத்தலுக்கு நிவாரணம் அளிக்கப் பயன்படுத்தப்படுகின்றன.

## இந்த மருந்தை நான் **எப்படி** பயன்படுத்த வேண்டும்?

பிரச்சினையின் கடுமையைப் பொறுத்து, நீங்கள் பயன்படுத்த வேண்டிய மருந்தின் அளவை மருத்துவர் தீர்மானிப்பார். மருத்துவர் கூறும் அளவில் இந்த மருந்தைப் பயன்படுத்துங்கள்.

கண் சொட்டு மருந்து போடும் முறை:

- முதலில் கைகளைச் சோப்பு போட்டு கழுவுங்கள் மற்றும் போத்தலின் சீட்டில் உள்ள குறிப்புகளைப் படியுங்கள்.
- பயன்படுத்துவதற்கு முன்பாக போத்தலைக் குலுக்குங்கள்.
- தலையைப் பின்புறமாகச் சாய்த்து மேலே பாருங்கள்.
- கீழ் கண் இமையை மெதுவாக இழுத்து, ஒரு பை போல் ஆக்கி, போத்தலைப் பிதுக்கி ஒரு சொட்டு மருந்தை அதனுள் விடுங்கள். கிருமிகள் தொற்றாதிருக்க, போத்தலின் நுனி கண்ணிலோ அல்லது வேறு பகுதியிலோ படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.
- களிம்புகள் என்றால், கீழ் இமையின் உள் பகுதியில் அதை 0.5-1 செ.மீ நீளத்திற்கு ஒரு நாடா போல் இழுங்கள்.
- கண்களைக் குறைந்தது 30 வினாடிகளுக்கு மூடிக் கொள்ளுங்கள் (கண்களைச் சிமிட்டவோ, தேய்க்கவோ, துடைக்கவோ அல்லது கசக்கவோ கூடாது).
- கீழ் இமையின் உள் ஓரத்தை விரலால் மெதுவாக 1 அல்லது 2 நிமிடங்களுக்கு அழுத்திவிடுங்கள். இப்படிச் செய்வதால் மருந்து கண்ணில் நன்றாகச் சேரும்.
- ஒரு சொட்டுக்கும் கூடுதலாகப் போட வேண்டுமென்றாலோ, அல்லது வேறு ஒரு சொட்டு மருந்தைப் பயன்படுத்த வேண்டியிருந்தாலோ, அடுத்த சொட்டைப் போடுவதற்கு முன்பாக 5 முதல் 10 நிமிடங்கள் காத்திருக்க வேண்டும். (இது, முதல் சொட்டு வேலை செய்வதற்கு முன்பாகவே அது இரண்டாவது சொட்டால் கழுவி விடப்படுவதைத் தடுக்கும் மற்றும் 2 வெவ்வேறு மருந்துகளுக்கிடையில் எதிர் விளைவுகள் உண்டாவதையும் தடுக்கும்.)
- சொட்டு மருந்து, களிம்பு ஆகிய இரண்டையும் பயன்படுத்தினால், சொட்டு மருந்தை முதலில் போட வேண்டும்.

நீங்கள் கண் ஒட்டுவில்லை (contact lenses) அணிபவர் என்றால், எல்லா மருந்தையும் முடிக்கும்வரை அவற்றை அணியாதீர்கள்.

போத்தலைத் திறந்த பிறகு, மருந்தை 4 வாரங்களுக்கு மேல் பயன்படுத்தக் கூடாது. போத்தலின் மீதுள்ள சீட்டில் போத்தலைத் திறந்த தேதியை எழுதி வைத்துக் கொள்ளுங்கள். அப்போதுதான் அதை எப்போது வீச வேண்டும் என்பது தெரியும்.

மருந்துகளை எப்போதும் பிள்ளைகளின் கைகளுக்கு எட்டாத இடத்தில் வைத்திருங்கள
காலாவதியான அல்லது இனிமேல் தேவைப்படாத மருந்துகளை வீசிவிடுங்கள

## மருந்து போட்டுக் கொள்ள **மறந்துவிட்டால்** என்ன செய்வது?

ஒரு வேளைக்குரிய மருந்தை போடத் தவறிவிட்டால் அல்லது மறந்துவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே போட்டுக்கொள்ளுங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், முதலில் போடத் தவறிய மருந்தை விட்டுவிட்டு, அடுத்த வேளை வரை காத்திருங்கள். முதலில் போடத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு மருந்தோ அல்லது கூடுதல் மருந்தோ பயன்படுத்தாதீர்கள். மருந்தைப் பலமுறை போடத் தவறிவிட்டால், என்ன செய்ய வேண்டும் என்பதை மருத்துவரிடம் கேளுங்கள்.

## இந்த மருந்து ஏற்படுத்தக்கூடிய **பக்க-விளைவுகள்** யாவை ?

கண்களில் சிறிது நேரத்திற்கு எரிச்சல் அல்லது கடுப்பு இருத்தல், பார்வை மங்குதல், மற்றும் கண் எரிச்சலும் சிவத்தலும் அதிகமாதல் போன்ற பக்க-விளைவுகள் ஏற்படலாம். இவை உங்களுக்கு இருக்கலாம் அல்லது இல்லாமலும் போகலாம். மருந்தைத் தொடர்ந்து பயன்படுத்தி வரும்போது இவை பொதுவாக நீங்கிவிடும். அப்படி நீங்கவில்லை என்றால், மருத்துவரிடம் கேளுங்கள்.

பின்வரும் பக்க-விளைவுகள் இருந்தால், மருத்துவ உதவி நாடுங்கள்:

- தலைவலி
- வியர்த்தல்
- வேகமான அல்லது ஒழுங்கற்ற இதயத்துடிப்பு
- தலைச்சுற்றல் மற்றும் பலவீனம்
- படபடப்பு

## நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை ?

பின்வருபவை இருந்தால் மருத்துவரிடம் தெரிவியுங்கள்:

- வேறு மருந்துகளுக்கு ஒவ்வாமை இருந்தால், அல்லது இந்த மருந்துக்கு ஒவ்வாமை ஏற்பட்டால் அதைத் தெரிவியுங்கள். ஒவ்வாமையின்போது பின்வரும் அறிகுறிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டது பாதிக்கும் ஈ முகம்/கண்கள்/உதடுகள் வீங்கும், மூச்சு விடச் சிரமமாக இருக்கும், அல்லது உடல் முழுவதும் அரிப்புடன் கூடிய தோல் தடிப்புகள் தோன்றும்.
- கண் பிரச்சினை 5 முதல் 7 நாட்களுக்குப் பிறகும் மேம்படவில்லை என்றால் ,அல்லது அது மேலும் மோசமானால் அதைத் தெரிவியுங்கள்.
- நீங்கள் தாய்ப்பால் கொடுத்து வந்தால், கர்ப்பமாக இருந்தால், அல்லது சிகிச்சையின்போது கர்ப்பமாக வாய்ப்பிருந்தால் அதைத் தெரிவியுங்கள்.

## மருந்தை நான் எப்படிப் **பாதுகாக்க** வேண்டும் ?

மருந்தின்மீது வெப்பமோ நேரடி வெளிச்சமோ படாதவாறு, அறை வெப்பநிலையில், ஓர் உலர்ந்த இடத்தில் வைத்திருங்கள். உங்களிடம் கூறப்பட்டாலன்றி, மருந்தை குளிர்ப் பதனப் பெட்டியில் வைக்காதீர்கள்.